மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்புக் கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்கள்

## The values of life found in the Kavithai Pozhil Poetry Collection

சரவணன் இராமச்சந்திரன் / Saravanan Ramachindran[1] நீலாவதி சாமிக்கண்ணு / Neelavathi Samykanu[2] மோகனதாஸ் இராமசாமி / Mohanadass Ramasamy[3]
[1] Master Research Scholar, Universiti Malaya
Corresponding Email: svanan7578@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியம் காலக் கண்ணாடி என்பர். இலக்கியத்தின் வாயிலாகவே நாம் நமது முன்னோரின் அகபுற வாழ்வியலைக் கற்றுணர முடிகிறது. அகபுற வாழ்வியல் விழுமியங்கள் நிறைந்தவை நம் இலக்கியங்கள். அகபுற வாழ்வியல் விழுமியங்களை இலக்குகளாக எடுத்தோதி அவற்றின்வழி நம் வாழ்வைச் செப்பனிட்டு நல்வழி காட்டும் அறிவுப் பெட்டகம் நம் இலக்கியங்கள். இத்தகு தொன்மை இலக்கியங்களின் வடிவமே கவிதையில் அமைந்தன என்பது நமக்கு மட்டும் பெருமை சேர்க்கும் ஒன்றாகும். தொன்மைத் தமிழ் இலக்கியங்கள் யாவும் செய்யுள் வடிவிலேயே நமக்குக் கிடைக்கப் பெற்றன. ஐரோப்பியரின் வருகைக்குப் பிறகு, உரைநடை அறிமுகம் கண்டு பெரும் வளர்ச்சி பெற்றபோதும் கவிதை தனக்கெனத் தனியிடம் பெற்று வளர்ச்சி கண்டு வந்ததை மறுக்கவியலாது. எத்தனை மொழிநடை வந்தாலும் தமிழ்மொழியின் கவிதை நடைக்கு ஒப்புநிகராக முடியாதென்பது தமிழுக்குக் கிடைத்த பேறு. தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்த நம் முன்னோர் மொழியையும் சமயத்தையும் பண்பாட்டையும் தங்களோடு அடையாளங்களாகவும் அணிகலன்களாகவும் கொண்டொழுகினர். அவ்வகையில், மொழியின் உச்சமான மரபு கவிதையை மலைநாட்டில் விதைக்க மறக்கவில்லை. மலேசியக் கல்வி அமைச்சு, தமிழ் இலக்கியப் பாடத்தில் நாவல், நாடகத்தோடு மரபு கவிதையையும் ஒரு பிரிவாக இணைத்துள்ளது இதற்குத் தக்க சான்றாகும். இலக்கியப் பாடம் தொடங்கிய 1956ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை இலக்கியப் பாடத்தின் மூன்று பிரிவுகளுள் மாற்றமில்லை. அவ்வகையில் 2020ஆம் ஆண்டு தொடங்கிய இலக்கியப் பாடத்திட்டத்தில் வாடா மலர், நாவலாகவும் பிசிராந்தையார், நாடகமாகவும் கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பு, கவிதையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆய்வுக்கு மூன்று நோக்கங்கள் வரையறுக்கப்பட்டன. அவையாவன; கவிதைப் பொழில் கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்களை அடையாளங் காணல், கவிதைப் பொழில் கவிதைகளில் அடையாளங் கண்ட வாழ்வியல் விழுமியங்களை ஆராய்தல், கவிதைப் பொழில் கவிதைகளில் வெளிப்படும் வாழ்வியல் விழுமியங்களை வாழ்க்கையோடு தொடர்புபடுத்துதல் ஆகும். இவ்வாய்வு கவிதைத் தொகுப்பான கவிதைப் பொழில் கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்கள் மாணவராக்கத்திற்கும் மாந்தராக்கத்திற்கும் எவ்வாறு துணைநிற்கின்றன என்பது குறித்து ஆராய்கிறது.

**கருச்சொற்கள்:** கவிதை, வாழ்வியல் விழுமியங்கள், படிப்பினை, மாணவராக்கம், மாந்தராக்கம்

**Abstract**

Literature is called the mirror of time. It is only through literature that we are able to learn the inner life of our forefathers. Our literature is full of internal values. Our literature is a repository of knowledge that takes the values of inner life as goals and guides our lives through them. It is a matter of pride for us alone that the form of such ancient literature is embodied in poetry. All the ancient Tamil literature was available to us in the form of poems. There is no denying the fact that after the arrival of Europeans, the introduction of prose and the great development of poetry has developed in its own right, and it is a privilege for Tamil that no matter how many languages there may be, the poetic style of the Tamil language cannot be compared to the style of poetry of the Tamil language! Our forefathers, who migrated from Tamil Nadu, took language, religion and culture with them as symbols and ornaments. The supreme tradition of the language has not forgotten to sow poetry in Malaya. This is evidenced by the fact that the Malaysian Ministry of Education has included traditional poetry as a section of Tamil literature along with novels and dramas. From 1956, when the literature lesson began, to the present day, there has been no change in the three sections of the literature course. In 2020, Vaada Malar (வாடா மலர்) as novel, Pisiranthaiyar (பிசிராந்தையார்), as drama, and Kavithai Pozhil Poetry Collection (கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பு) as poems were selected as the texts. Three objectives were defined for the study. They are; Identifying the values of life found in poems in poetry, exploring the values of life found in poems in poetry, relating life values expressed in poems to life in poetry. This study is to explore the life values found in poems towards studentization and humanization.

**Keywords:** Poetry, Values of life, Lessons, Studentization, Humanization

## முன்னுரை

மலேசியத் திருநாட்டில் தமிழ் இலக்கியம் பாடத்திற்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு. ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் ஆங்கில இலக்கியத்திற்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. 1956ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட ராசாக் கல்விக் கொள்கை, மலாய், சீனம், தமிழ் இலக்கியப் பாடங்களுக்கு முன்னுரிமை வழங்கியது (Zahari et al., 2020). அன்று தொட்டு இன்றுவரை இலக்கியப் பாடம் படிவம் ஐந்து அரசாங்கத் தேர்வில் ஒரு விருப்பப் பாடமாக இடம் பெற்று வருகின்றது. ஏறத்தாழ ஒவ்வோர் ஆண்டும் 3000 மாணவர் தமிழ் இலக்கியப் பாடத்தைத் தேர்வுப் பாடமாக எடுத்து வருகின்றனர்.

1956ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ் இலக்கியப் பாடத்தில் மூன்று பிரிவுகள் உருவாக்கப்பட்டன. அவை; நாவல், நாடகம், கவிதைத் தொகுப்பு. இவற்றுள் கவிதைத் தொகுப்புக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் அனைத்தும் மரபு கவிதைகளாகவே இன்றுவரை தொடர்கின்றன என்பது மரபு கவிதைக்கு நாம் கொடுத்துள்ள மிகப் பெரிய அங்கீகாரம் ஆகும். கவிதைத் தொகுப்புகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட மரபு கவிதைகள் உள்நாட்டு, தமிழ்நாட்டுக் கவிஞர்களால் பாடப் பெற்றவையாகும். 2020ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கே.எஸ்.எஸ்.எம் பாடத்திட்டத்தில் தமிழ் இலக்கியத்திற்கான தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் முதல்முறையாக கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவால் தயாரிக்கப்பட்டது. அதற்கு முன்னர், மலேசியத் தேர்வு வாரியமே அனைத்துப் பொறுப்பையும் ஏற்றது குறிப்பிடத்தக்கது (Kiramany et al., 2022).

2020ஆம் ஆண்டுமுதல் எஸ்பிஎம் தேர்வுப் பாடங்களுள் தமிழ் இலக்கியப் பாடத்தின் நூல்களாக, **வாடா மலர் (முனைவர் மு.வரதராசன்)** நாவலாகவும் **பிசிராந்தையார் (பாவேந்தர் பாரதிதாசன்)** நாடகமாகவும் **கவிதைப் பொழில்** கவிதைத் தொகுப்பாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பில் 12 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. 12 கவிதைகளுள் 6 கவிதைகளை நம்நாட்டுக் கவிஞர்களும் மேலும் 6 கவிதைகளைத் தமிழ்நாட்டுக் கவிஞர்களும் பாடியுள்ளனர். கவிதைத் தலைப்பும் கவிஞர் பெயரும் கீழ்க்காணும் பட்டியலில் வழங்கப்பட்டுள்ளன.

| எண் | கவிதைத் தலைப்பு | கவிஞர் |
|---|---|---|
| 1. | காலம் பறக்குதடா | கரு. திருவரசு |
| 2. | நாளை நமதே | காசிதாசன் |
| 3. | சஞ்சிக்கூலி | காரைக்கிழார் |
| 4. | ஞான வழி | பொன்முடி |
| 5. | காலை அழகு | வாணிதாசன் |
| 6. | சூரியன் வருவது யாராலே? | நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை |
| 7. | மடமை மூடிய இருட்டு | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் |
| 8. | வாழ்க்கையே ஒரு திருவிழா | த. கோவிந்தன் |
| 9. | மயில் | சுரதா |
| 10. | காவியமும் ஓவியமும் | முரசு நெடுமாறன் |

| | | |
|---|---|---|
| 11. | காடு | பாதாசன் |
| 12. | பெண்கள் விடுதலைக் கும்மி | சி. சுப்ரமணிய பாரதி |

**(கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பு, 2020)**

இப்பன்னிரு கவிதைகளும் ஓசைநயத்தாலும், அணிநயத்தாலும், பொருள்நயத்தாலும், சொல்நயத்தாலும் தனிச்சிறப்புகளைப் பெற்றொளிர்ந்து படிப்போர் மனத்தை ஈர்க்கச் செய்கின்றன. இக்கட்டுரையில் கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் காணப்படும் படிப்பினைகள் வாழ்வியல் விழுமியங்களாக ஆராயப் படுகின்றன.

**ஆய்வுப் பின்னணி**

இலக்கை எடுத்தியம்பவே இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. வாழ்வியல் இலக்குகளை மாந்தரின் உள்ளத்தில் விதைத்து, நல்வழியை விளைப்பன இலக்கியங்கள் ஆகும். அவ்வகையில், கவிதைகளும் பல்வேறு பாடுபொருள்களையோ மையக்கருத்துகளையோ அடிப்படையாகக் கொண்டு வாழ்வியலுக்குத் தேவையான விழுமியங்களை விதைக்கவல்லன. மாகவி பாரதி, கவிதை குறித்துப் பாடுங்கால்,

“பாட்டுத் திறத்தாலே – இவ்வையகத்தைப்
பாலித்திட வேணும்!”

(பாரதியார் கவிதைகள், 2012)

என்கிறார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களோ கவிதை இலக்குக் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

“உள்ளத் துள்ளது கவிதை – இன்பம்
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தெளிந்து ரைப்பது கவிதை!

(மலரும் மாலையும், 2012)

நன்னூலாசிரியர் பவணநந்திமுனிவரோ உடலுக்கும் கவிதைக்கும் ஒப்புமை காட்டிக் கவிதை இன்னதென்று விளக்குகிறார்.

“பல்வகைத் தாதுவின்
உயிர்க்(கு) உடல்போல், பல
சொல்லால் பொருட்(கு) இட
னாக உணர்வின்
வல்லோர் அணிபெறச்
செய்வன செய்யுள்”

(நன்னூல், நூற்பா 268)

உள்ளத்திலுள்ளவற்றை உணர்ச்சி பொங்கத் தெள்ளத் தெளிந்த சொற்களால் எடுத்துரைப்பதுதான் கவிதையாகும் (சுப்புரெட்டியார், 1988). ஆக மொத்தத்தில், கவிதை என்பது ஓரிலக்கை எடுத்தோத கவிஞர்கள் கையாளும் இலக்கியம் எனலாம்.

அவ்வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரு கவிதைகளும் பல கருப்பொருள்களைக் கொண்டு சிறந்து விளங்குகின்றன. கருப்பொருள்களின் அடிப்படையில் அவை மாந்த வாழ்வியலின் உய்வுக்குத் தேவையான வாழ்வியல் விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றன.

**ஆய்வு நோக்கம்**

பன்னிரு கவிதைகளுள் காணப்படும் வாழ்வியல் விழுமியங்களைக் கண்டறிந்து ஆய்வுக்குட்படுத்து மூன்று நோக்கங்கள் வரையறுக்கப்பட்டன. அவை;

i. கவிதைப் பொழில் கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்களை அடையாளங் காணல்.
ii. கவிதைப் பொழில் கவிதைகளில் அடையாளங் கண்ட வாழ்வியல் விழுமியங்களை ஆராய்தல்.
iii. கவிதைப் பொழில் கவிதைகளில் வெளிப்படும் வாழ்வியல் விழுமியங்களை வாழ்க்கையோடு தொடர்புபடுத்துதல்.

**ஆய்வு வினா**

வரையறுக்கப்பட்ட நோக்கங்களை அடைய மூன்று ஆய்வு வினா உருவாக்கப்பட்டன. அவை;

i. கவிதைப் பொழில் கவிதைகளில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்கள் யாவை?
ii. கவிதைப் பொழில் கவிதைகளில் வாழ்வியல் விழுமியங்கள் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன?
iii. கவிதைப் பொழில் கவிதைகளில் வெளிப்படும் வாழ்வியல் விழுமியங்கள் எவ்வாறு வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன?

**கண்டடைவு (வாழ்வியல் விழுமியங்கள்)**

செந்தமிழ் அகராதி விழுமியம் என்பதற்கு, *'மேலான பொருள், சிறந்தது, உயர்ந்தது'* என்ற பொருளை வழங்கியுள்ளது. வாழ்வியல் விழுமியங்கள் என்பது மனிதர்களால் வாழ்வியலில் கடைப்பிடிக்கப்படும் முக்கியமான கொள்கைகள் அல்லது நம்பிக்கைகள் எனலாம். அவை தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் முடிவுகள், செயல்கள் மற்றும் உறவுகளில் வழிகாட்டும் அடிப்படை இலட்சியங்கள். மனித விழுமியங்கள் கலாச்சார, சமூக, வரலாற்றுச் சூழல்களால் மட்டுமல்ல, தனிப்பட்ட அனுபவங்கள், நம்பிக்கைகள், உலகக் கண்ணோட்டங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்விழுமியங்கள் நேர்முறையான பண்புகளுடனும் நடைமுறைகளுடனும் தொடர்புடையவை. மேன்மைமிகு வாழ்வியல் நெறிமுறைகளையும் கட்டமைப்பையும் வடிவமைப்பதில் வாழ்வியல் விழுமியங்கள் முக்கியக் பங்கு வகிக்கின்றன.

ஒட்டுமொத்தமாக, மனித விழுமியங்கள் பற்றிய ஆய்வு என்பது தத்துவம், உளவியல், சமூகவியல், மானுடவியல் மற்றும் பிற துறைகளிலிருந்து பெறப்பட்டவையாக விளங்குகின்றன (Sassenberg, K., & Woltin, K. 2022).

ந. சுப்புரெட்டியார் கவிதையையும் அதன் இலக்கையும் இணைத்து, அஃது எடுத்தோதும் கருத்தும், இலக்குமே விழுமியம் எனும் வரையறையை நிறுவுகிறார். கவிதை உணர்த்தும் கருத்துகளே வாழ்வியல் விழுமியங்களாகப் படிப்போர்க்கு அமைகின்றன. *'வாழ்க்கையிலும் மனிதப் பண்பிலும் உள்ள பொதுத்தன்மையை எடுத்துக் கூறுவதே கவிதையின் நோக்கமாகும். 'யாம்பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்ற உயர்ந்த குறிக்கோள் கவிதைத் துறையில் எளிதாக நிறைவேறுகின்றது. கவிஞனின் மனத்தில் தோன்றிய அனுபவமே கவிதையாக முகிழ்கின்றது; வடிவம் கொள்ளுகின்றது. கவிதையைப் படிக்கும் நாமும் அக்கவிஞன் பெற்ற அனுபவத்தையே பெற்று விட்டால், கவிதையும் உணர்த்த வேண்டியவற்றை உணர்த்திவிடும் நிலையை அடைந்து விடுகின்றது.'* (சுப்புரெட்டியார் - பாட்டுத் திறன், 1988)

இனித் தொடர்ந்து ஒவ்வொரு கவிதையும் எத்தகைய வாழ்வியல் விழுமியங்களை உணர்த்துகின்றன என்பதை ஆராயலாம்.

**காலம் பறக்குதடா**

வண்ணக் கவிஞர் கரு. திருவரசு அவர்கள் புனைந்த கவிதை 'காலம் பறக்குதடா'. சமுதாயம் என்கின்ற பாடுபொருளில் தமிழர் முன்னேற்றம் எனும் மையக்கருவை முன்னிறுத்தி இக்கவிதை புனையப்பட்டுள்ளது. உலகப் போக்கிற்கு ஏற்பத் தமிழர்கள் தங்கள் வாழ்வைச் சீரமைக்க முனைந்தால் மட்டுமே வாழ்க்கையில் வளர்ச்சி உண்டு எனும் வாழ்வியல் விழுமியத்தை மையப்படுத்தி இக்கவிதை வடிக்கப்பட்டுள்ளது. தமிழரிடையே பல்வகைமை ஆற்றல்களும் திறன்களும் இருந்த போதும், அவற்றை முறைப்படுத்தி முன்னேறப் பழம்பெருமைகளைப் பேசுவதை விடவேண்டும் என்றும் தமிழர்கள் தங்களிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார் கவிஞர் அவர்கள்.

'ஒன்றிச் செயல்புரிந்தால் – நாம்
 உச்சிக் குயர்வோமென
ஒன்றி முறைவகுப்பாய்! – சின்னாள்
 சென்று நிலையறிந்தால்
என்றும் இருந்ததுபோல் – இருப்பாய்
 ஏதும் செயல்புரியாய்!
என்றிங் குயர்வதடா! – தமிழா
 எண்ணிச் செயல்தொடடா!

என ஒற்றுமை உணர்வே தமிழர்களை மேலோங்கச் செய்யும், மாறாகச் செயல்பட்டால் எப்போது இங்கு உயர்வது? என வினா எழுப்புகிறார். ஒன்றிச் செயல்படுதல் ஒன்றே

இனமீட்சிக்கு வழிவகுக்கும். காலங் காலமாகத் தமிழர்கள் தங்களுக்குள் ஒற்றுமை இழந்து வருவதால் எதிர்காலம் இருளாகி வருவதை உணர்ந்த கவிஞர், ஒற்றுமையைப் பேணிக் காத்தலின் அவசியத்தை வாழ்வியல் விழுமியமாய் விட்டுச் செல்கிறார்.

**நாளை நமதே**

கவிஞர் காசிதாசன் கைவண்ணத்தில் மலர்ந்த கவிதை 'நாளை நமதே'. வாழ்க்கை எனும் பாடுபொருளில் தமிழர் தம் சிறப்புகளை அறிந்தால் எதிர்காலம் சிறக்கும் என்ற மையக்கருவை முன்வைத்துப் புனையப்பட்டுள்ளது. இக்கவிதையில் இயற்கையைப் போற்றுவதோடு அந்த இயற்கை அழியாமல் காப்பது நமது கடமையாகும் என்ற விழுமியத்தைச் சொல்லியிருப்பார். மேலும், நாட்டின் மேம்பாட்டிற்குப் பாடாற்றிய நம் முன்னோர்களின் ஈகத்தையும் வரலாற்றையும் அறிதல் அவசியம் என்பதையும் வலியுறுத்தி இருப்பார்.

முத்து மணித்திரள் மூழ்கி எடுத்தவர்
        முன்னுரை வாழ்வெனக் கொட்டுங்கடி
முத்திரை யிட்டவர் மூத்த குடியினர்
        முத்தமிழ் என்றே கொட்டுங்கடி!

நாளை வருங்காலம் நம்மவர்க்கே என்று
        நம்தமிழ்ப் பெண்களே கொட்டுங்கடி
வேளை வருமென்று வீணில் உறங்காமல்
        வீறுகொண்டே கும்மி கொட்டுங்கடி!

என, இந்த நாட்டில் நமக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறதென்று நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். உலக முன்னேற்றத்திற்கு ஏற்பத் தமிழர்கள் தங்கள் வாழ்வைச் சீரமைத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தை, 'எவ்வ துறிவது உலகம்' என்னும் வான்புகழ் வள்ளுவரின் குறள்மொழியைச் சார்ந்து நமக்கான வாழ்வியல் விழுமியமாகச் சேர்ப்பித்துள்ளார் கவிஞர்.

**சஞ்சிக் கூலி**

கவிஞர் காரைக்கிழாரின் சஞ்சிக் கூலி எனும் கவிதை, கவிச்சுடரைப்போல் புகழ்பெற்ற ஒரு கவிதை. தோட்டப்புறத் தமிழர்களின் அவலம் எனும் மையக்கருவைக் கொண்டு புனையப்பட்ட கவிதையாகத் திகழ்கிறது. ஆங்கிலேயர்கள் நம்மைச் சஞ்சிக்கூலிகளாய்த் தமிழ்நாட்டிலிருந்து மலாயாவிற்குக் கொண்டு வந்த கதையையே சொல்லிச் சொல்லித் தலைமுறையின் வளர்ச்சியில் கவனம் செலுத்தாமல் போய்விட்டோம் என்ற செய்தியைச் சொல்லும் கவிதையாக வார்க்கப்பட்டுள்ளது. சேமிப்புப் பழக்கத்தின் அவசியம், மாற்றுச் சிந்தனை இல்லாமை, அறியாமையைப் போக்கிக் கொள்ளும் நிலையின்மை, தங்கள் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் முனைப்பின்மை எனக் காலந்தோறும் தொடர்கின்ற இடர்களைத் தம் கவிதையில் தமிழர்களுக்கான அறைகூவலாய் விடுத்திடுக்கிறார் கவிஞர்.

‘தேடிய பணத்தில் ஓடிய செலவைத்
திடமாய்க் கொஞ்சம் சேமித் திருந்தால்
வாடிய நாளே வாய்த்திருக் காது
மற்றவர் போல நின்றி ருப்பாய்! – வெறும்
மழுங்க னாகவா இன்றி ருப்பாய்?’

எனும் வரிகளின் வாயிலாகக் குடும்ப முன்னேற்றத்திற்கும் இனத்தின் முன்னேற்றத்திற்கும் பொருளியல் பலம் இன்றியமையாதது எனும் பொருளியல் விழுமியத்தை வலியுறுத்துகிறார். சேமிப்பு ஒன்றே வளமான எதிர்காலம் அமையத் துணைசெய்யும் என்பதையும் நிலைநிறுத்துகிறார்.

**ஞானவழி**

கவிஞர் பொன்முடி அவர்களின் சிந்தையில் உதித்த கவிதை ஞானவழி. அறிவு எனும் பாடுபொருளில் உயர்ந்தோர் வழி நிற்றல் எனும் மையக்கருவின் அடிப்படையில் புனையப்பட்ட கவிதையாகும்.

‘ஞானவழி சென்றே நாளும்
இயல்பிலாச் செயல்க ளாற்றிப்
போனவழி நெறியென் கின்றாய்;
பொய்க்கு;மெய் வண்ணம் பூசி

ஊனவிழிக் குயர்வு சேர்ப்பாய்;
உனக்கொன்று சொல்வேன், நல்லோர்
ஞானவழி நிற்பாய், நெஞ்சே
நல்லுப தேசம் இஃதே!’

என்று, நெஞ்சுக்குச் சொல்வதாக ஞானவழியை உபதேசிக்கிறார். உயர்ந்தோர் வழிநிற்றல் வாழ்வியல் விழுமியங்களுள் ஒன்றாகத் திருவள்ளுவரும் கூறுகிறார். ‘பெரியாரைத் துணைகோடல்’ (அதிகாரம் 45) எனும் ஓரதிகாரமே இதற்குச் சான்றாக அமையும்.

‘பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்’ (குறள் 450)

என்ற குறள் பெரியாரைத் துணைகோடல் அதிகாரத்தின் இறுதிக் குறளாக அமைகிறது. இக்குறள்வழி திருவள்ளுவர், ‘நல்லவராகிய பெரியாரின் தொடர்பைக் கைவிடுதல் பலருடைய பகையைத் தேடிக்கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமை உடையதாகும்,’ எனப் பகர்கின்றார். இதே கருத்தைக் கவிஞரும் உயர்ந்தோர் வழி நின்று ஞானவழியைப் பின்பற்றினால் வாழ்வு முழுமை அடையும் என்றும் பற்று நீங்கி வாழல் நிம்மதியான

வாழ்க்கைக்கு வழிகோலும் என்றும் உணர்த்துகிறார். பற்றறுத்தலும் இறைவன் திருவடியைப் பற்றி வாழ்தலும் தமிழர் வாழ்வியல் விழுமியத்தின் உச்சம். படைப்பின் இலக்கும் அதுதானே.

'நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே'
(சிவபுராணம், திருவாசகம்)

வீடுபேற்றை நோக்கிய இவ்வுலக வாழ்வில் 'எண்குணத்தான் தாளைப்' பற்றுதற்குத் துணைசெய்வார் உயர்ந்தோர் தானே. ஆதலால்தான் ஞானவழியில் உயர்ந்தோர் வழிநிற்றலை நெஞ்சுக்குச் சொல்லி அதை ஆற்றுப்படுத்துகிறார் கவிஞர் பொன்முடி.

**காலை அழகு**

தமிழ்நாட்டுக் கவிஞர், கவிஞரேறு வாணிதாசன் அவர்களால் புனையப்பட்ட கவிதை 'காலை அழகு'. இயற்கை எனும் பாடுபொருளில் காலைப் பொழுதின் அழகு என்ற மையக்கருவின் அடிப்படையில் எழுந்த கவிதை இது. இயற்கையோடு இயைந்து வாழும் முறையே தமிழர் வாழ்வியல் முறையெனும் விழுமியத்தை உணர்த்தும் இயற்கைக் கவிதை. இயற்கையை அழகாகப் படம்பிடித்துக் காட்டும் கவிதை. வெள்ளி முனைப்பினிலும், புள்ளின ஓசையிலும், காலைப் பிறப்பினிலும், சோலைக் கலகலப்பிலும், சேவல் அழைப்பினிலும், தாமரை மொட்டினிலும், பெண்கள் குளிர்முகத்தினிலும் என எங்கும் அழகைப் பார்த்துப் பரவசப்படுகிறார் கவிஞர். இயற்கையை அதன் தன்மையிலேயே பார்ப்பதென்பது ஓர் அரிய கலை. இக்கலையானது இயற்கையை நேசிக்கத் தூண்டுவதோடு அதன் அவசியத்தையும் நமக்கு உணர்த்தும். இயற்கையோடு இயைந்த வாழ்வமைந்த காலத்தில் மாந்த வாழ்வு மகிழ்வுற்றிருந்தது. மாந்தன் இயற்கைக்கு அரணாகவும், இயற்கை மாந்தனுக்கு அரணாகவும் இருந்ததை வரலாறு நமக்குணர்த்தியுள்ளது. இந்நிலை இன்று அருகி வருவது வேதனைக்குரியதாகும். மாந்தனின் தன்னலப் போக்கும் பேராசையும் இயற்கையை அழிவுக்கு இட்டுச் செல்கின்றது. இயற்கையின் அழிவு, மாந்த இனத்திற்கே அழிவு எனும் உண்மையை நாம் உணர்ந்து இயற்கையை அடுத்த தலைமுறைக்கு நலமிகுந்ததாகவும் வளமிகுந்ததாகவும் விட்டுச் செல்வதைக் கடமையாகக் கொள்ளல் வேண்டுமென்ற விழுமியத்தை இக்கவிதை வழி நம்மனத்தில் பதித்துச் செல்கின்றார் கவிஞர்.

**சூரியன் வருவது யாராலே?**

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் கைவண்ணத்தில் மலர்ந்த கவிதை 'சூரியன் வருவது யாராலே?' இறை நம்பிக்கை பாடுபொருளில், இறையாற்றலைப் போற்றிடுவோம் எனும் மையக்கருவில் விளைந்த கவிதை இது. சமய நல்லிணக்கத்தைக் கற்பிக்கும் கவிதையாகப் படைக்கப்பட்டுள்ளது. இயற்கையைப் போற்றல் வேண்டும், இயற்கையை இயக்கும் இறைமையைப் போற்றல் வேண்டும் என்ற விழுமியத்தைப் பகரும் கவிதையாகும். இறைவனை அவரவர் சமயக் கற்றலின்வழி அறியலாம் என்பதையும் எந்த மதக் கடவுளும் உயர்ந்தவரே என்பதையும் ஆறுகள் பலவாக இருப்பினும் அவை அடையும்

கடலொன்றே எனும் உயரிய சமய நல்லிணக்கதை விதைக்கும் சிறந்த கவிதைகளுள் ஒன்றாக இன்றுவரை விளங்குகிறது இக்கவிதை.

'அல்லா வென்பார் சிலபேர்கள்;
        அரன்அரி யென்பார் சிலபேர்கள்;
வல்லான் அவன்பர மண்டலத்தில்
        வாழும் தந்தை யென்பார்கள்;
சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
        என்றும் சிலபேர் சொல்வார்கள்;
எல்லா மிப்படிப் பலபேசும்
        ஏதோ ஒருபொருள் இருக்கிறதே!

அந்தப் பொருளை நாம்நினைந்தே
        அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்
எந்தப் படியார் எவரதனை
        எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
        நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போமதை வணங்கிடுவோம்;
        வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்!'

சமயங்களால் சதிராடும் மாந்தர்க்குச் சாட்டையடி இந்தக் கவிதை. பிரிவினைகளையும் பிணக்குகளையும் மறந்து அவரவர் மதக் கோட்பாட்டின்வழி பிறர் மதத்தை, நம்பிக்கையைத் தூற்றாமல் வாழ்தலே இறைவனைத் தொழுவாரின் உண்மை உள்ளம் என்பதைப் படம்பிடித்துக் காட்டும் கவிதையாகச் சமயநெறி விழுமியத்தை எடுத்தோதுகிறது.

**மடமை மூடிய இருட்டு**

'மாட்டுவண்டி புகாத ஊரிலும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாட்டுவண்டி செல்லும்' என்பர். மக்கள் கவிஞர், பட்டாளிக் கவிஞர் எனும் பெருமையுடைய கவிஞர் பட்டுக்கோட்டையார். அறியாமை எனும் பாடுபொருளில் சமுதாயத்தில் சிலரின் பண்பற்ற போக்கு எனும் மையக்கருவை முன்வைத்து, அவர் சிந்தையொளியில் உதித்த கவிதை 'மடமை மூடிய இருட்டு' ஆகும்.

'குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்
குருட்டு உலகமடா – இது
கொள்ளை யடிப்பதில் வல்லமை காட்டும்
திருட்டு உலகமடா – தம்பி
        தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
        திருந்த மருந்து சொல்லடா (குறுக்கு)

எனப் பிறரை ஏமாற்றி வாழும் மாந்தர்நிலையைச் சாடி இவர் வடித்திருக்கும் பாடல் இன்றும் மாந்தரின் ஏமாற்றம் அடைந்த மாந்தரின் மனத்திற்கு அருமருந்தாய் அமைந்து வருகின்றது. நற்சிந்தனை, சண்டைச் சச்சரவுகளைத் தவிர்த்தல், அடுத்தவரை முன்னேற்ற வழிகாட்டுதல், எளியவர்களை ஆதாரித்தல், உழைத்து வாழ வேண்டும் என்ற சிந்தனைகளைக் கவியாக்கிப் பாடலாகத் தந்து நம்வாழ்வு உய்ய வழியமைத்திருக்கிறார் கவிஞர் அவர்கள்.

'அன்பு படர்ந்த கொம்பினிலே ஒரு
அகந்தைக் குரங்கு தாவும் – அதன்
அழகைக் குலைக்க மேவும்
கொம்பு ஒடிந்து கொடியும் குலைந்து
குரங்கும் விழுந்து சாகும் – சிலர்
குணமும் இதுபோல் குறுகிப் போகும்
கிறுக்கு உலகமடா – தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
திருந்த மருந்து சொல்லடா (குறுக்கு)'

என்ற வரிகள் இன்றும் நமக்கான வாழ்வியல் விழுமியமாய்க் கண்முன்னே பரந்து விரிந்து நிற்கின்றது.

**வாழ்க்கையே ஒரு திருவிழா**

தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞர் த. கோவேந்தன் கைவண்ணத்தில் மலர்ந்த கவிதை 'வாழ்க்கையே ஒரு திருவிழா' வாழ்க்கை எனும் பாடுபொருளில் அன்பு எனும் மையக்கருவில் மலர்ந்த கவிதையாகத் திகழ்கிறது. வாழ்க்கையின் அடித்தளமே அன்பில்தான் அமைகிறது. உலகமே அன்பைப் போற்றி மகிழ்கிறது. 'அன்பே சிவம்' என்றும், 'அன்புடையார் எல்லார் தமக்குரியர்' என்றும் இலக்கியங்களும் அனைத்து மதங்களும் அன்பைக் கொண்டாடி, மாந்தரை அன்புநெறியைப் பின்பற்றி வாழச் சொல்கின்றன (Bardazzi, 2023). அன்புநெறி பட்டோர் வாழ்க்கை எந்தச் சூழ்நிலையிலும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அன்பின்வழியே மக்களை இணைத்திட முடியும். அன்பொழுக வாழ்வதால் இன்பமொழுக வாழலாம் எனும் ஆழ்ந்த அன்புடைமையைப் போற்றிப் பாடுவதோடு அதன்பால் நம்மைச் சேர்க்கிறார் கவிஞர்.

'நம்மைச் சுற்றிலும் அழகொளி
ஞாயிறு ஒண்கதிர் நேருறச்
செம்மை அன்பையே பொழிந்திடும்
சேர்ந்து வந்திடும் ஊரெலாம்

நாள்பொழு தெலாம்அன் புறவுதான்
நலமும் வலுவும் தந்திடும்;
நாள்பொழு தெலாம்உன் அன்புயிர்
கணந்தொறும் வாழ உதவுமே!'

**மயில்**

உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் கற்பனைத் தேரில் கவிநயம் புரிந்த கவிதை மயிலாகும். உயிரினங்கள் எனும் பாடுபொருளில் மயிலின் அழகும் இயல்பும் எனும் மையக்கருவை அடிப்படையாகக் கொண்டு அழகிய கவிதையாய்ப் படைத்திருக்கிறார் கவிஞர்.

‘நீட்டுயர் மேடையில் நாட்டிய மாடிக்
காட்டும் பறவையே கலவை மயிலே
தொங்கும் தோகையில் வகைநிலை காண்கிறேன்
வண்ணத் தோகையில் வகைநிலை காண்கிறேன்
விரிக்கும் தோகையில் விரிநிலை காண்கிறேன்!’

என மயிலின் அழகும் இயல்பும் ததும்பும் வண்ணம் கவிதை நடமிடுகிறது. மயிலினம் அழியாமல் பாதுகாத்தல் அவசியம், தமிழர் வாழ்வியல் கூறுகளை அறிந்து நடைமுறைப்படுத்துவது, ஒரு செயலை ஆராய்ந்து செய்ய வேண்டும், செந்தமிழைப் போற்றுவது நமது கடமை எனும் உயிரிய சிந்தனையோடு தமிழியச் சிந்தனைகளையும் நமக்களித்துக் கவிதை யாத்துள்ளார் கவிஞர்.

**காவியமும் ஓவியமும்**

பாப்பா பாவலர் முரசு நெடுமாறன் அவர்கள் படைப்புணர்வு எனும் பாடுபொருளில் குழந்தையின் கலையுணர்வைப் போற்றுதல் எனும் மையக் கருவில் புனையப்பட்ட கவிதை காவியமும் ஓவியமும். ‘எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை (பெற்றோர்) வளர்ப்பினிலே’ என்ற புலமைப்பித்தன் வரிகளுக்கு வலுச்சேர்க்கும் வண்ணம் அமைந்தது இக்கவிதை. இயல்பிலேயே குழந்தைகள் கலையுணர்வும் அறிவாற்றலும் நிறைந்தவர்களே (Del Giudice & Haltigan, 2023). பிள்ளைகளின் கலையுணர்வைக் கட்டுப்படுத்துவது அவர்களின் ஆர்வத்தை மழுங்கச் செய்வதோடு அவர்களைத் தாழ்வு மனப்பான்மை நிறைந்தவர்களாக உருமாற்றுகிறது. மாறாக, பிள்ளைகளின் ஆற்றலை வளர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் போது அப்பிள்ளைகளின் தன்னம்பிக்கையும் மேலோங்குவதைக் காண முடிகிறது. பிள்ளைகளின் கலைப்படைப்புகளை மதிக்கக்கூடிய மனப்பக்குவத்தைப் பெற்றோர்கள் கொண்டிருத்தல் அவசியம் எனும் குழந்தை வளர்ப்பு முறையின் அவசியத்தையும் உணர்த்துகிறார். குழந்தையின் உளவியலை அறிந்து செயல்படுவதன் வழி சிறந்த தலைமுறையை உருவாக்க இயலும் என்ற கருத்தையும் மசீரான் முன்வைக்கிறார் (Masiran, 2022) ‘அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ்’ (குறள் 64 : மக்கட்பேறு) என்ற திருவள்ளுவர் கூற்றுக்கும், குழந்தைகளின் கலைப்படைப்புக்கு நிகரான ஒன்று உலகிலில்லை எனும் பாப்பா பாவலரின் கூற்றும் ஒப்புநோக்கத் தக்கதாய் உள்ளது.

‘எந்தக் கலைஞனும் எழுதிட முடியா
ஓவியக் காட்சிகள் ஒளிர்ந்தன சுவரில்!
அடுப்புக் கரியுடன் அருமை மகன்தான்
ஆங்கே அருங்கலை மணிபோல்
தேங்கும் மகிழ்ச்சி சிறக்கநின் றனனே!’

**காடு**

மணிக்கவிஞர் பாதாசன் அவர்களின் கைவண்ணத்தில் மலர்ந்த கவிதை காடு. காட்டின் வளம் எனும் பாடுபொருளில் காடு காட்டும் வாழ்வியல் எனும் மையக் கருத்தை முன்னிறுத்திப் பாடிய கவிதையாகப் பூத்திருக்கிறது. காடுகள் அழிந்தால், மாந்த இனம் அழியும். காடுகளே நமக்கான உயிர்வளியை அளிக்கின்றன. காடுகளே கனிவகைகளையும் காய்கறி, கிழங்கு வகைகளையும் அரிய மருந்துகளையும் நமக்களிக்கும் இயற்கைக் கொடை, காட்டைப் போற்றிப் பாதுகாத்தல் ஒன்றே மாந்த இனத்தின் பெருங்கடமை ஆகும் (Ab Rahman, 2022). மேலும், காடுகள் சார்ந்த விழிப்புணர்வும் வேண்டும் என்ற விழுமியத்தை நமக்களிக்கிறார் கவிஞர்.

‘காட்டிலுள்ள நன்மரங்கள் வீடாய் மாறும்
கனிகளெலாம் நமக்குணவாய்ச் சுவைகொ டுக்கும்!
பாட்டிசைக்க நமக்கெல்லாம் கற்றுத் தந்த
பறவைவருந் தும்தம்மின் கூட்டில் வாழ்ந்து
ஆட்டத்தை மயில்பாம்பு மானின் கூட்டம்
அவற்றிடம்நாம் கற்றோமே; எண்ணிப் பார்த்தால்
காட்டிலுள்ள ஒவ்வொன்றும் பயனை நல்க
நாட்டிலுள்ள நாம்யார்க்கும் பயனற் றோமே!’

இக்கவிதைவழி, காடு அனைத்துயிருக்கும் பயனளிப்பதுபோல், நாமும் அனைத்துயிருக்கும் பயனளிக்கும் வாழ்க்கை வாழ வேண்டுமென்ற வாழ்வியல் விழுமியத்தை விதைக்கிறார். ‘யாம்பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்’ என்பதுபோல் நாம் மட்டும் நன்மையடையாது நம்மால் மற்றவரும் நன்மையடையச் செயலாற்ற வேண்டுமென்கிறார்.

**பெண்கள் விடுதலைக் கும்மி**

மாகவி பாரதியாரின் கைவண்ணத்தில் பெண்ணுரிமை எனும் பாடுபொருளில் பெண் விடுதலை எனும் மையக்கருவில் பிறந்த கவிதை ‘பெண்கள் விடுதலைக் கும்மி’. பெண்கள் நாட்டின் கண்கள், பெண்ணுரிமை, பெண் விடுதலை எனப் பல பாடுபொருளில் பெண்ணடிமை விலங்கைத் தகர்த்தெறியும் போர்வாளாய்க் கவிதை யாத்தவர் மாகவி. வையகத்தின் பேதமையைப் போக்கிட வேண்டுமென்றால் பெண்களுக்கு அறிவொளி ஏற்றுதல் ஒன்றே அதற்கான வழி என்று நம்பிக்கையை விதைத்ததோடு அதற்கான செயலிலும் இறங்க வேண்டுமென்று பறைசாற்றினார்.

‘ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமைஎன்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.’

ஆண்களுக்குச் சிறுவயதிலிருந்தே பெண்களைப் போற்றும் நெறிகளைக் கற்றுத் தருதல் அவசியமென்றும் கற்புநிலை இருபாலருக்கும் பொதுவென்றும் வலியுறுத்துகிறார். பெண்கள் ஆண்களுக்கு நிகராகச் சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்பதை;

‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கேபெண்
இளைப்பில்லை காண்என்று கும்மியடி!’

என்ற வரிகள்வழி நமக்குணர்த்துகிறார். பெண்களைப் போற்றும் இனமே உலகில் உயர்ந்த இனமாகக் கருதப்படும். அத்தகைய இனமாகவே தமிழினம் இருந்து வந்துள்ளமை ஈண்டு உணரத்தக்கது. சங்கக் காலந்தொட்டே பெண்களுக்கான உரிமையையும் உயரிய இடத்தையும் நாம் வழங்கியே வந்திருக்கிறோம். இலக்கியத்தில் பெண்பாற் புலவர்கள் அதிகம் கொண்டவர் நாம்தாம். இயற்கையையும் பெண்ணாகவே பார்த்தவர்களும் நாம்தாம். இடையிலே ஏற்பட்ட சருக்கல்கள் பெண்ணுரிமையைப் பறித்திருக்கிறது. அதை மீட்டுருவாக்க எழுந்த கவிதையாகவே இது விளங்குகிறது. பெண்மையைப் போற்றுவோம் என்னும் வாழ்வியல் விழுமியத்தை இக்கவிதை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது.

**நிறைவுரை**

கவிதைப் பொழில் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பன்னிரு கவிதைகளும் அவற்றுக்கெனத் தனித்தனிச் சிறப்புகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் கொண்டிலங்குகின்றன. படிவம் நான்கு, ஐந்து மாணவர்களின் கற்றல் திறன்களுக்கேற்ப இக்கவிதைகள் வடிவமைக்கப் பட்டுள்ளன எனும் கருத்தினை ஆசிரியர்கள் கொண்டுள்ளனர். ஒவ்வொரு கவிதையும் பற்பல படிப்பினைகளை வலியுறுத்தினாலும், வாழ்வியல் விழுமியங்கள் எனும் நோக்கில் அப்படிப்பினைகளைத் தொகுத்தே இக்கட்டுரையில் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியப் பாடத்தின் நோக்கங்களாக ஆறு நோக்கம் வரையறுக்கப்பட்டுள்ளன. அவையாவன;

1. இலக்கிய வகைகளையும் கூறுகளையும் அறிந்து விவரித்தல்
2. இலக்கியப் படைப்புகளையும் படைப்பாளர்களையும் பற்றி விவரித்தல்
3. இலக்கியப் படைப்புகளை வாசித்துப் புரிந்துகொள்வதோடு அவற்றைப் பகுப்பாய்வும் செய்தல்
4. இலக்கியப் படைப்புகளின் முருகுணர்ச்சியை உய்த்துணர்ந்து விவரித்தல்
5. இலக்கியப் படைப்புகளைத் திறாய்வு செய்து அவற்றை விளக்குதல்
6. இலக்கியப் படைப்புகளிலுள்ள உயரிய பண்புகளை நலம் பாராட்டுதல்

(மலேசியத் தேர்வு வாரியம், 2020)

வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்கேற்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளும் மாணவர்களுக்கு உயரிய பண்புகளின் நலம் பாராட்டுவதோடு அவற்றை வாழ்வியல் விழுமியங்களாகக் கொண்டு வாழ்வாங்கு வாழவும் வழியமைக்கின்றன.

**துணைநூற்பட்டியல்**


Ab Rahman, N. (2022). Wacana Budaya dan Seni dalam Puisi Melayu Moden oleh Penyair Negeri Kelantan. Malay Literature, 35(1), 83-108.

Bardazzi, M. (2023). Everything I Did I Did for Happiness. Slant Books.

Del Giudice, M., & Haltigan, J. D. (2023). A new look at the relations between attachment and intelligence. Developmental Review, 67, 101054.

Kiramany, I., Ponniah, K., & Jaiseelan, S. (2022). TEACHERS'PERCEPTIONS TOWARDS THE LITERARY TEXTS USED IN TAMIL LITERATURE SUBJECT IN 2021 IN COMPARISON TO THE TEXTS USED IN 2016. Journal of Positive School Psychology, 25-35.

Masiran, R. (2022). A Review of Parenting in A Multicultural Country: The Malaysian Experience. Parenting-Challenges of Child Rearing in a Changing Society.

Zahari, M. A. M., Amirul, A. A., Yaakub, R., & Sarudin, A. (2020). KEWAJARAN PENGGUNAAN PRODUKSI TEATER DALAM PEMBELAJARAN GENRE DRAMA MELALUI MATA PELAJARAN KESUSASTERAAN MELAYU KOMUNIKATIF: APPROPRIATENESS OF THE USE OF GENRE DRAMA THEATER IN LEARNING TOWARDS COMMUNICATIVE MALAY LITERATURE SUBJECT. Jurnal Gendang Alam (GA), 10.

Sassenberg, K., & Woltin, K. (2022). The role of values in social identity change. Current Opinion in Psychology, 43, 113-118. doi: 10.1016/j.copsyc.2022.01.018

Harpaz-Rotem, I., & Leiderman, S. (2021). The value of empathy: Examining the relations between empathy, values, and well-being. Journal of Positive Psychology, 16(6), 775-786. doi: 10.1080/17439760.2020.1861152

Roccas, S., & Sagiv, L. (2020). Value change and stability across the life span: A review and some theoretical considerations. Personality and Social Psychology Review, 24(4), 381-401. doi: 10.1177/1088868319867817

அ.கி. பரந்தாமனார், 2007. கவிஞராக, பாரி நிலையம், சென்னை.

கவிதைப் பொழில், 2020. (முரசு நெடுமாறன், தொகுப்பாசிரியர்), உமா பதிப்பகம், கோலாலம்பூர்.

சுப்புரெட்டியார். ந, 1983. கவிதை பயிற்றும் முறை, பாரி நிலையம், சென்னை.

சுப்புரெட்டியார். ந, 1988. பாட்டுத் திறன், ஸ்டார் பிரசுரம், சென்னை.

மலேசியத் தேர்வு வாரியம், 2020. மலேசியக் கல்வி அமைச்சு.

வரதராசன். மு, 1972. தமிழ் இலக்கிய வரலாறு, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை.

வரதராசன். மு, 1949. திருக்குறள் தெளிவுரை, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை.